இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு ஆட்சித் தலைவரால் இசைவளிக்கப்பட்ட பணிகள் அனைத்தையும் செலவின்மேல் வரம்பிற்குள் மேற்கொள்ள இயலவில்லை. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் தொழிற்பகுதியிலுள்ள பணிகளைமட்டுமே மேற்கொள்ள முதலிடம் கொடுக்கப்பட்டிருந்ததால் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும் இந்தப் பணியை மேற்கொள்ள இயலவில்லை. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல், மத்திய அரசு இசைவு கொடுத்தால் இந்த வேலை துவங்கப்படும்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவரவர்களே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய எஸ்டிமேட் என்ன ? நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எவ்வளவு எஸ்டிமேட் போட்டிருக்கிறார்கள் ? அதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இத் திட்டத்திற்கு சுமார் 10 லட்சம் ரூபாய் செலவாகும் என்று இப்பொழுது மதிப்பிடப்படுகிறது.

Meenambakkam Air Port.

*560 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Air Lines Corporation has consulted the Tamil Nadu Government about the expansion of the Meenambakkam Air Port?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

Dr. H. V. HANDE : With regard to the aerodrome is it not a fact that the Government of Tamil Nadu has suggested certain recommendations and is it not a fact that the present aerodrome is insufficient to allow Boeings and other big planes to freely come and go? May I also know whether the aerodrome is going to be developed as an inter-national airport? What suggestions have this Government offered to aerodrome authorities or the Central Ministry concerned with regard to this aerodrome?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்த விமான நிலையத்தை விரிவுபடுத்துவதுபற்றி இந்திய விமானப் போக்குவரத்துக் கழகம் மாநில அரசாங்கத்துடன் கலந்தாலோசிப்பதில்லை. ஆனால் ஒரு புதிய விமானப் போக்குவரத்து வசதிக்கேற்ற தளம் மீனம்பாக்கத்தில் அமைக்கப்பெறவேண்டும். அதுவும் மேலாக பகுதி விமானக் கூடம் அமைப்பது என்ற அடிப்படையில் உள்நாட்டு போக்குவரத்துக்கும், வெளிநாட்டுப் போக்குவரத்துக்கும் ஏற்றதான வகையில் தற்போதுள்ள விமானக்கூடம் பாதை ஆகியவற்றிற்கு ஒட்டினாற்போலவும், அவற்றுக்கு தென்-மேற்சேயுள்ள நிலங்களிலும் தளத்தை அமைக்கவேண்டும். இம் மேம்பாட்டுக்கான மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 18·28 கோடி என இப்பொழுது கணக்கிடப்பட்டுள்ளது

திரு. மு. ச. சிவசாமி : தலைவரவர்களே, தமிழகத்தில் இப்பொழுதிருக்கும் நான்கு விமான தளங்களைத்தவிர, வேறு புதிய விமான தளங்கள் அமைக்க தமிழக அரசு சிபாரிசு செய்திருக்கிறதா? சிபாரிசு செய்திருக்கிறது என்றால், தூத்துக்குடி அதில் சேர்க்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தூத்துக்குடியில் விமான தளம் அமைக்கும் செயற்குறிப்பு நம்முடைய அரசாங்கத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினரவர்கள் தூத்துக்குடிக்கு விமானதளம் வேண்டுமென்று விண்ணப்பம் கொடுத்தால் அதைக்கொண்டு மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யலாம்.